

நீலகிரி நாடாளுமன்ற தொகுதியில் மேட்டுப்பாளையம் நகராட்சிக்குட்பட்ட பல்வேறு பகுதிகளில் நீலகிரி எம்.பி.யும், தி.மு.க. துணை பொதுச் செயலாளருமான ஆ.ராசா வாக்களித்த மக்களுக்கு நன்றி தெரிவித்து உரையாற்றினார். இந்நிகழ்ச்சியில் தி.மு.க. கோவை வடக்கு மாவட்டச் செயலாளர் தொண்டாமுத்தூர் ரவி, முன்னாள் மாவட்டச் செயலாளர் சி.ஆர்.ராமச்சந்திரன், தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள் அஷ்ரப் அலி, டி.ஆர்.சண்முகசுந்தரம், ஒன்றியச் செயலாளர் எஸ்.எம்.டி.கல்யாணசுந்தரம், கூடலூர் நகராட்சி தலைவர் அறிவரசு, நகரச் செயலாளர்கள் முகமது யூனூஸ், முனுசாமி மற்றும் பல்வேறு அணிகளைச் சேர்ந்த பேரூர், நகர, மாவட்டக் கழக நிர்வாகிகள் திரளாக கலந்து கொண்டனர்.

### நீலகிரி நாடாளுமன்றத் தொகுதி

# மேட்டுப்பாளையம் நகரத்தில் வாக்காளர்களுக்கு நன்றி!

## ஆ.ராசா எம்.பி. தெரிவித்தார்!

நீலகிரி, செப். 29 -

நீலகிரி நாடாளுமன்ற தொகுதியில் மேட்டுப்பாளையம் நகராட்சிக்குட்பட்ட பல்வேறு பகுதிகளில் நேற்று நீலகிரி எம்.பி.யும், கழக துணைப் பொதுச்செயலாளருமான ஆ.ராசா வாக்களித்த மக்களுக்கு நன்றி தெரிவித்து உரையாற்றினார்.

அப்போது, ஓடந்துறை பகுதியில் பேசிய அவர் நடைபெற்ற முடிந்த நாடாளுமன்ற தேர்தலில் திராவிட முன்னேற்ற கழகத்தின் சார்பில் இந்தியா கூட்டணி கட்சிகளின் ஆதரவோடு நீலகிரி நாடாளுமன்ற தொகுதியின் வேட்பாளராக என்னை அறிவித்து உங்களிடத்திலே வெற்றி பெறச்செய்யுமாறு தமிழ்நாட்டின் முதல்வர், திராவிட மாடல் ஆட்சியின் நாயகர், இந்தியாவின் நம்பர் ஒன் முதலமைச்சர் என்று பெயர் எடுத்திருக்கின்ற முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் வேண்டுகோள் விடுத்தார்.

அவருடைய வேண்டுகோளை ஏற்று, கடந்த காலங்களில் இந்த தொகுதியில் நான் ஆற்றிய பணிகளை கருத்தில் கொண்டு மீண்டும் இந்த தொகுதியின் நாடாளுமன்ற உறுப்பினராக என்னை டெல்லிக்கு அனுப்பி வைத்திருக்கிறீர்கள்./வாக்களித்த வாக்காள பெருமக்களாகிய உங்கள் அனைவரின் பொற்பாதங்களையும் தொட்டு முதலில் எனது நன்றியினை தெரிவித்துக் கொள்கிறேன்.

கடந்த முறை இந்த தொகுதியில் நான் போட்டியிட்ட போது என்னை 2 லட்சம் வாக்கு வித்தியாசத்தில் வெற்றி பெறச்செய்தீர்கள். இந்த முறை இரண்டரை லட்சம் வாக்குகள் வித்தியாசத்தில் வெற்றி பெற செய்து நாடாளுமன்றத்திற்கு அனுப்பி உள்ளீர்கள். இதற்கு என்ன பொருள் என்றால் கடந்த ஐந்து ஆண்டுகளில் நான் செய்த சேவைகளை விட இன்னும் கூடுதலாக சேவை செய்ய வேண்டும் என எனக்கு உத்தரவிட்டு உள்ளீர்கள் என்று பொருள்.

எனவே,அந்த உணர்வோடு கடந்த காலங்களில் ஆற்றிய பணிகளை விட இன்னும் கூடுதலாக, விரைவாக, வேகமாக, விவேகமாக மக்கள் பணியாற்றுவேன் என இந்த நேரத்திலே உங்களுக்கு நான் உறுதி அளிக்க விரும்புகிறேன் என்று பேசினார்.

தொடர்ந்து அதிக வாக்குகளை பெற்று தந்த தி.மு.க. மேட்டுப்பாளையம் வடக்கு நகரச் செயலாளர் முகமது யூனூசுக்கு தலைமைச் செயற்குழு உறுப்பினர் டி.ஆர்.சண்முகசுந்தரம் ஏற்பாட்டின் பேரில் முதல்வர் ஸ்டாலின் உருவப்படம் பொறித்த ஒரு சவரன் தங்க மோதிரத்தை அணிவித்து கௌரவித்தார்.

இதேபோல் காட்டூர் ரயில்வே கேட் அருகே மாநில பொதுக்குழு உறுப்பினர் நவீன் தலைமையில் திரண்டிருந்த தி.மு.க.வினர் நீலகிரி எம்.பி. ஆ.ராசாவிற்கு 15 கிலோ எடையுள்ள செர்ரி, பேரிச்சம்பழங்களை கொண்டு கட்டப்பட்ட ஆளுயர மாலை அணிவித்தும்,வீரவாள் பரிசளித்தும் நன்றி தெரிவிப்பு கூட்டத்திற்கு வந்த அவருக்கு வாழ்த்துக்களை தெரிவித்தனர்.

இந்நிகழ்ச்சியில் தி.மு.க. கோவை வடக்கு மாவட்டச் செயலாளர் தொண்டாமுத்தூர் ரவி,முன்னாள் மாவட்டச் செயலாளர் சி.ஆர். ராமச்சந்திரன், தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள் அஷ்ரப் அலி, டி.ஆர்.சண்முகசுந்தரம், ஒன்றியச் செயலாளர் எஸ்.எம்.டி.கல்யாணசுந்தரம், கூடலூர் நகராட்சி தலைவர் அறிவரசு, நகரச் செயலாளர்கள் முகமது யூனூஸ், முனுசாமி மற்றும் பல்வேறு அணிகளைச் சேர்ந்த பேரூர், நகர, மாவட்டக் கழக நிர்வாகிகள் திரளாக கலந்து கொண்டனர்.

### திருவண்ணாமலை மாவட்ட அமைப்பு சாரா ஓட்டுநர் அணி

# கார், ஆட்டோ சங்க பெயர்ப் பலகை, கொடியேற்று விழா!

## கழக மருத்துவ அணி துணைத் தலைவர் டாக்டர் எ.வ.வே.கம்பன் திறந்து வைத்தார்!

திருவண்ணாமலை, செப். 29 -

திருவண்ணாமலை தெற்கு மாவட்ட அமைப்புச் சாரா ஓட்டுநர் அணி சார்பில் திருவண்ணாமலை நகரில் கார் மற்றும் ஆட்டோ சங்க பெயர் பலகை மற்றும் கொடி ஏற்றும் விழா நடைபெற்றது. விழாவில் கலந்து கொண்டு கழக மருத்துவ அணி துணைத் தலைவர் டாக்டர் எ.வ.வே.கம்பன் பெயர் பலகை திறந்து வைத்து, கொடியேற்றி சிறப்புயாற்றினார்.

27.09.2024 அன்று திருவண்ணாமலை தெற்கு மாவட்ட அமைப்பு சாரா ஓட்டுநர் அணி சார்பில் கார், ஆட்டோ சங்க பெயர் பலகை மற்றும் கொடியேற்றும் விழா நடைபெற்றது.

விழாவிற்கு மாவட்ட அமைப்பாளர் ஏ.ஏ.ஆறுமுகம் தலைமை வகித்தார். மாவட்டத் துணை அமைப்பாளர்கள், மெட்ராஸ் கே.சுப்பிரமணி, கி. பிரகாஷ், இரா.அன்பரசு ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

காலை 9.30 மணிக்கு திருவண்ணாமலை திருக்கோவிலூர் ரோடு, மாநகராட்சி அலுவலகம் அருகில் பேரறிஞர் அண்ணா கார் ஓட்டுநர் சங்கத்தின் சார்பிலும், காலை 10.00 மணிக்கு செங்கம் சாலை சண்முகா பள்ளி அருகில் உதயநிதி ஸ்டாலின் ஆட்டோ நிறுத்தத்தின் சார்பிலும், காலை 10.30 மணிக்கு செங்கம் சாலை, மேற்கு காவல் நிலையம் அருகில் உதயநிதி ஸ்டாலின் ஆட்டோ நிறுத்தம் சார்பிலும் பெயர் பலகை திறப்பு விழா மற்றும் கொடியேற்று விழா நடைபெற்றது.

விழாவில் கலந்து கொண்டு கழக மருத்துவர் அணி துணைத் தலைவர் டாக்டர் எ.வ.வே.கம்பன் அவர்கள் பெயர் பலகைகளை திறந்து வைத்தும், கொடியேற்றி நல உதவிகள் மற்றும் அறுசுவை உணவு பொட்டலங்கள் வழங்கி சிறப்புரைஆற்றினார்.

சங்க நிர்வாகிகள் கார் சங்கம் எஸ்.ஸ்ரீதர், எம். பாண்டியன், ஏ.சதீஷ்குமார், ஆட்டோ சங்கம் சென்னை என்.சுரேஷ், பாவாடை மணி, என்.தருமன், ஜி.அண்ணாமலை, ஏ.எஸ்.அருள், எம்.கண்ணன் ஆகியோருக்கு டாக்டர் எ.வ.வே.கம்பன் அவர்கள் சால்வை அணிவித்து பாராட்டினார்.

விழாவில் நகர செயலாளர் ப.கார்திவேல்மாறன், மாவட்ட பொருளாளர் எஸ். பன்னீர்செல்வம், மாவட்ட துணைச் செயலாளர் பிரியா விஜயரங்கன், டி.வி.எம்.நேரு, துணை மேயர் சு.ராஜங்கம், ஒன்றிய செயலாளர் மெய்யூர் சந்திரன், மாவட்ட அமைப்பாளர் பாலமுரளிகிருஷ்ணா, வழக்கறிஞர்கள் அ.அருள்குமரன், ந.சீனுவாசன் மற்றும் அய்யம்பாளையம் திருநாவுக்கரசு, ஆ.தேமுருகையன், மாமன்ற உறுப்பினர் மண்டி பிரகாஷ், ஸ்ரீ தேவி பழனி, கலைவாணி சுரேஷ், ஒன்றியக் குழு உறுப்பினர் எம்.பி.விஜயன், த.ஆனந்தன், சங்க நிர்வாகிகள் ஜி.ஆர். முருகன், பி.வில்சன், பி.செந்தில்குமார், ஆர்.சீனுவாசன், ஆர்.பிரபு, ஏ.ரமேஷ், ஜெ. நடராஜன், கே.செந்தில், இரா.ஆழ்வார், எம்.அருள், பி.ஜான்பாஷா, டி.குமார் உட்பட ஏராளமானோர் கலந்து கொண்டனர்.




இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் 26.09.2024 அன்று தஞ்சாவூர் மாவட்டம், கும்பகோணத்தில், டாக்டர் கலைஞர் விளையாட்டு உபகரணங்கள் வழங்கும் திட்டத்தினை துவக்கி வைத்தார். அதனைத் தொடர்ந்து, புதுக்கோட்டை மாவட்டம், மாட்சிமை தங்கிய மாமன்னர் கலை மற்றும் அறிவியல் கல்லூரியில், டாக்டர் கலைஞர் விளையாட்டு உபகரணங்களை, சட்டம், நீதிமன்றங்கள், சிறைச்சாலை மற்றும் ஊழல் தடுப்பு சட்டத்துறை அமைச்சர் எஸ்.ரகுபதி, மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி. மு.அருணா தலைமையில் வீரர், வீராங்கனைகளுக்கு வழங்கி, விளையாட்டு உபகரணங்கள் ஊராட்சிகளுக்கு அனுப்பி வைக்கும் பணியினை துவக்கி வைத்தார். உடன் புதுக்கோட்டை மாநகராட்சி மேயர் திருமதி.திலகவதி செந்தில், புதுக்கோட்டை சட்டமன்ற உறுப்பினர் மரு.வை. முத்துராஜா, முன்னாள் அரசு வழக்கறிஞர் கே.கே.செல்லப்பாண்டியன், மாவட்ட ஊராட்சிக் குழுத் தலைவர் திருமதி.ஜெயலட்சுமி தமிழ்செல்வன், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் அரசு அலுவலர்கள் பலர் உள்ளனர்.



ஈரோடு மாநகராட்சி மண்டலம் 3 முத்தம்பாளையம் ஹவுசிங் யூனிட் பகுதியில் உள்ள பெரும்பள்ளம் ஓடையில் ஆகாய தாமரை அகற்றும் பணியினை வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை, மதுவிலக்கு ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் சு.முத்துசாமி தொடங்கி வைத்தார். நிகழ்வில் ஈரோடு நாடாளுமன்ற உறுப்பினர் கே.இ.பிரகாஷ், மேயர் நாகரத்தினம் சுப்பிரமணியம், மாநகராட்சி ஆணையாளர் மரு.மனீஷ், துணை மேயர் வி.செல்வராஜ் உள்ளிட்ட பலர் உள்ளனர்.

### அரசு தரிசு நிலங்களை கையகப்படுத்தி

# அருந்ததிய மக்களுக்கு வழங்கிட தனிக்குழு ஏற்படுத்த வேண்டும்!

## முதலமைச்சரிடம் கழக துணை பொதுச் செயலாளர் - நீலகிரி எம்.பி., ஆ.ராசா கோரிக்கை!

நீலகிரி, செப். 29 -

அருந்ததியர் மக்களுக்கு வீட்டுமனை பட்டா வழங்கிட ஏதுவாக வருவாய் அலுவலக நிர்வாக அலகு ஒன்றை, தனி மாவட்ட வருவாய் அலுவலர் ஒருவர் தலைமையில் ஒரு கோட்டாட்சியர் மற்றும் போதுமான வட்டாட்சியர்கள் உள்ளடக்கிய குழுவை அமைக்க வேண்டும் என கழக துணை பொதுச்செயலாளர், நீலகிரி நாடாளுமன்ற உறுப்பினர், முன்னாள் ஒன்றிய அமைச்சர் ஆ.ராசா முதலமைச்சர் முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அவர்களிடம் கோரிக்கை மனு அளித்துள்ளார்.



அதில் கூறியுள்ளதாவது : கிருஷ்ணகிரி, தர்மபுரி, சேலம், நாமக்கல், திருப்பூர், ஈரோடு, கோவை உள்ளிட்ட வருவாய் மாவட்டங்களில் வசிக்கும் ஆதிதிராவிடர் அருந்ததியர் மக்களுக்கு போதுமான வாழ்விட வசதிகள் இல்லை என்பதை தங்களின் கவனத்திற்கு பல்வேறு சமூக மற்றும் அரசியல் அமைப்புகள் ஏற்கனவே கொண்டு வந்துள்ளன.

எனது நீலகிரி நாடாளுமன்றத் தொகுதிக்குட்பட்ட அவிநாசி, மேட்டுப்பாளையம் மற்றும் பவானிசாகர் பகுதிகளில் வருவாய் கிராமங்களில் உள்ள தரிசு நிலங்களை கண்டறிந்து. 500 க்கும் மேற்பட்ட குடியிருப்பு பட்டாக்களை அரசின் மூலம் ஏற்கனவே வழங்கி உள்ளோம். அதுபோலவே மற்ற மாவட்டங்களிலும் அருந்ததிய மக்களுக்கு வீட்டுமனைப் பட்டா வழங்கிட போதுமான அளவு அரசு தரிசு நிலங்கள் உள்ளதாக வருவாய்த்துறை அலுவலர்கள் மூலம் தெரிய வருகிறது.

எனவே, இம்மாவட்டங்களில் உள்ள அரசு தரிசு நிலங்களை கண்டறிந்து, கையகப்படுத்தி இப்பகுதியில் கணிசமான அளவு மக்கள் தொகை கொண்ட அருந்ததியர் மக்களுக்கு வழங்கிட ஏதுவாக "வருவாய் அலுவலக நிர்வாக அலகு" (Revenue Administrative Unit) ஒன்றை, தனி மாவட்ட வருவாய் அலுவலர் ஒருவர் தலைமையில் ஒரு கோட்டாட்சியர் மற்றும் போதுமான வட்டாட்சியர்கள் உள்ளடக்கிய குழு அமைத்து பூர்வாங்க பணிகளை மேற்கொள்ள அன்புடன் வேண்டுகிறேன்.

தலைமைச் செயலாளர் அல்லது வருவாய் செயலாளர் ஆகியோரின் கண்காணிப்பில் இப்பணிகளை குறித்த காலத்தில் முடித்திடும் வகையில் உரிய ஆணைகள் வழங்கிடவும் அன்புடன் வேண்டுகிறேன் என்று கேட்டுக் கொண்டுள்ளார்.

### புதுக்கோட்டை வடக்கு மாவட்டக் கழகத்தினர்

# வாக்காளர் பட்டியல் சரிபார்த்தல் - சேர்த்தல் பணியை சிறப்பாக செய்திடுவீர்!

## மாவட்டச் செயலாளர் கே.கே.செல்லபாண்டியன் வேண்டுகோள்!

புதுக்கோட்டை, செப். 29 -

புதுக்கோட்டை வடக்கு மாவட்டச் செயலாளர் கே.கே.செல்லப்பாண்டியன் வெளியிட்டுள்ள அறிக்கை வருமாறு:

தமிழ்நாடு முதலமைச்சர் கழகத் தலைவர் அவர்களின் அறிவுறுத்தலின்படி, இந்திய தேர்தல் ஆணையம் வருகின்ற 01.01.2025 தகுதியேற்படுத்தும் நாளாகக் கொண்டு தமிழகத்திலுள்ள வாக்காளர் பட்டியல்கள் திருத்தம் செய்திட புகைப்படத்துடன் கூடிய வரைவு வாக்காளர் பட்டியலைத் தேர்தல் ஆணையம் 29,10 2024 அன்று வெளியிட உள்ளது. புதுக்கோட்டை வடக்கு மாவட்டத்திலுள்ள புதுக்கோட்டை, கந்தர்வகோட்டை, விராலிமலை ஆகிய மூன்று சட்டமன்ற தொகுதிகளிலும், 29.10.2024 முதல் 28.11.2024 வரை புதிய வாக்காளர்களைச் சேர்க்கவும் மற்றும் பெயர்கள் நீக்கவும் திருத்தம் செய்யவும் மனுச் செய்ய கால அவகாசம் கொடுக்கப்பட்டுள்ளது.

இதுதவிர தலைமை தேர்தல் அதிகாரி அறிவிக்கும் சனி. ஞாயிறு நாட்களில் நிர்ணயிக்கப்பட்ட வாக்குச்சாவடி மையங்களில் காலை 9.30 மணி முதல் மாலை 5.30 வரை சிறப்பு முகாம்கள் நடைபெறவுள்ளது.

அதன்படி, இந்த நாட்களில் வாக்காளரே தாமாக முன் வந்து வாக்காளர்கள் பட்டியலில் உள்ள தங்களது விவரங்களை சரிபார்த்து, விடுபட்ட வாக்காளர்களும், இடம் மாறிய வாக்காளர்களும், 1.1.2025 அன்று 18 வயது நிரம்பக் கூடிய புதிய வாக்காளர்களும் தங்கள் பெயர்களை சேர்க்க, நீக்க, திருத்தங்கள் மேற்கொள்வதற்கான படிவங்களை பெற்று பூர்த்தி செய்து, அந்தப் படிவங்களை அந்தந்த வாக்குச்சாவடி மையங்களில் கொடுக்க வேண்டும்.

இதனடிப்படையில் 2025 ஆம் ஆண்டு ஜனவரி 1ந் தேதி 18 வயது நிறைந்தவர்களின் பெயர்களையும், வாக்காளர் பட்டியலில் இதுவரை இடம் பெறாத பெயர்களையும். புதிதாக குடிபெயர்ந்து உள்ள வாக்காளர்களின் பெயர்களையும் வாக்காளர் பட்டியலில் சேர்க்கவும், தொகுதியிலிருந்து இடம் பெயர்ந்தவர்கள் மற்றும் இறந்தவர்கள் பெயர்களை தற்போதுள்ள பட்டியலில் இருந்து நீக்கவும். தீவிர நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமென கேட்டுக் கொள்கிறேன்.

வாக்காளர் பட்டியலில் பெயர் சேர்த்தலுக்கு படிவம் 6லும், பெயர் நீக்கம் செய்திட படிவம் 7லும், வாக்காளர் விபரங்களில் உள்ள தவறுகளை திருத்தம் செய்திட ஒரே சட்டமன்றத் தொகுதிக்குள் திருத்தம், முகவரி மாற்றம், நகல் வாக்காளர் அடையாள அட்டை பெற Replacement id Card) படிவம் 6லும், அயல்நாடு வாழ் வாக்காளர் சேர்க்க (NRI Voters) படிவம் 6ஏ. ஆதார் எண் வாக்காளர் அடையாள அட்டையுடன் இணைக்க படிவம் 6 பி. விண்ணப்பம் பூர்த்தி செய்து அளித்திட வேண்டும். மேலும் வாக்கு சேர்ப்பதற்கு www.nvsp.in. மற்றும் www.voterpertal.eci.gov.in என்ற இணைய தளத்திலும் விண்ணப் பிக்கலாம். இதுவரை வாக்காளர் பட்டியலில் பெயர் சேர்க்கப்படாதவர்கள் மற்றும் இடம் மாறி வந்து வாக்காளர்களாக சேர்க்கவிரும்புபவர்களும், பெயர் சேர்த்துக் கொள்ள வேண்டிய விண்ணப்பப் படிவமான படிவம்62 முழுமையாக பூர்த்தி செய்திட வேண்டும். குறிப்பாக படிவம்6ன் கலம் IVல் மனுதாரரது முந்தைய முகவரியினை தவறாது எழுதிட வேண்டும் என்றும் கேட்டுக் கொள்கிறேன்.



வரைவு வாக்காளர் பட்டியல் வெளியிடுதல் 29.10.2024

2. பெயர்களைச் சேர்க்க /நீக்க / திருத்தம் செய்வதற்கு மனு கொடுக்க கால அவகாசம் 29.10.2024 முதல் 28.11.2024 வரை

3. சிறப்பு முகாம் நடத்தப்படும் நாட்கள் தலைமை தேர்தல் அதிகாரி அறிவிக்கும் சனி. ஞாயிறு நாட்கள்

4.இறுதி வாக்காளர் பட்டியல் வெளியிடப்படும் நாள் 06.01.2025

மேலும் மேற்கண்ட நாட்களில் நடைபெறும் வாக்காளர் சேர்ப்பு பணியிலும், சிறப்பு முகாம்கள் நடைபெறும் நாட்களிலும், புதுக்கோட்டை வடக்கு மாவட்டத்தைச் சேர்ந்த, மாநில, மாவட்டக் கழக நிர்வாகிகள் மாநகர, ஒன்றிய, நகர, பகுதி பேரூர் கிளைக் கழகச் செயலாளர்கள் மற்றும் நிர்வாகிகள், தலைமைச் செயற்குழு. பொதுக்குழு உறுப்பினர்கள், முன்னாள் இந்நாள் நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள். மாநகர மேயர், முன்னாள், இந்நாள் ஊராட்சி ஒன்றிய குழுதலைவர்கள், துணைத் தலைவர்கள், நகரமன்ற தலைவர்கள். பேரூராட்சி மன்ற தலைவர்கள், ஊராட்சி மன்ற தலைவர்கள் மற்றும் துணை தலைவர்கள். மாவட்ட, ஒன்றியக் குழு உறுப்பினர்கள், மற்றும் மாநகராட்சி, நகராட்சி, பேரூராட்சி, ஊராட்சி மன்ற உறுப்பினர்கள், முன்னாள், இந்நாள் உள்ளாட்சி பிரதிநிதிகள், மற்றும் வாக்குச்சாவடி நிலைக்குழு முகவர்கள் (BLA-2). பூத் கமிட்டி உறுப்பினர்கள் (BLC) மற்றும் கழக சார்பு அணிகளின் நிர்வாகிகள் கழக தோழர்கள் அனைவரும் இந்த வாய்ப்பினை பயன்படுத்தி தங்களை முழுமையாக ஈடுபடுத்திக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

மேலும் இந்த பணியின் விவரத்திளை மாவட்டக் கழகத்திற்கு தெரிவிக்குமாறு கேட்டுக் கொள்கிறேன்.

குறிப்பு: வாக்காளர் சேர்க்கும் பணியின்போது நமது கழகத்தின் சார்பாக நியமிக்கப்பட்டுள்ள BLA-2 க்கள் மற்றும் பூத் கமிட்டி உறுப்பினர்கள் (BLC) இந்த பணியினை முழுமையாக இருந்து 2026 சட்டமன்ற தேர்தல் வரை தேர்தல் ஆணையத்தால் நியமிக்கப்பட்டுள்ள BLO உடன் இருந்து கண்காணிக்க வேண்டும்.

இவ்வாறு தமது அறிக்கையில் கூறியுள்ளார்.



புதுக்கோட்டை மாவட்டம், ஆலங்குடி அரசு ஆண்கள் மேல்நிலைப்பள்ளியில் பயிலும் மாணவர்களுக்கு விலையில்லா மிதிவண்டிகளை, சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றத்துறை அமைச்சர் சிவ.வீ.மெய்யநாதன் நேற்று முன்தினம் (27.09.2024) வழங்கினார். உடன் புதுக்கோட்டை வருவாய் கோட்டாட்சியர் செல்வி.பா.ஐஸ்வர்யா, திருவரங்குளம் ஒன்றியக் குழுத் தலைவர் திருமதி.வள்ளியம்மை தங்கமணி, உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் அரசு அலுவலர்கள் பலர் உள்ளனர்.